நேரங்களில் முன்வருகின்றன. சில நேரங்களில் இனாமாகக்கூடக் கொடுக்க முன்வருகின்றன. . அப்படி இருக்குமானால், அந்த நட்புறவு நகரங்களுக்கு எழுதி, இந்தப் ப்ளானடேரியத்தை அமைக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, அதற்கான வழிவகைகள் இல்லை. பிற நாட்டார் இனாமாகத் தந்தாலும் கூட, இந்திய அரசினர் இனாமாகத் தருவதற்கு ஒப்புக் கொள்வதில்லை. அப்படி இனாமாகத் தந்தாலும் கூட, மத்திய அரசு விலையை நிர்ணயித்து, விலையிட்டு தருகின்ற முறைகள்தான் இருக்கின்றன. ஆனால், அந்த ப்ளானடேரியத்தை மிகச் சிறப்பாக அமைக்கின்ற நாடாக ஈஸ்ட் ஜெர்மனி இருக்கிறது. ஆகவேதான், ஈஸ்ட் ஜெர்மனியோடு நாம் தொடர்பு கொண்டிருக்கிறோம்.

சூலூரில் சுற்றுலா மாளிகை.

*663 வினா—திரு. கே. என். குமாரசாமி : மாண்புமிகு கல்வி சுற்றுலாத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சூலூரில் சுற்றுலா மாளிகை கட்ட அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விபரம் என்ன ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) இல்லை.

(இ) இவ்வினா எழவில்லை.

பொதுப்பணித்துறையின் கீழுள்ள ஏரிகள்.

*664 வினா—திரு. கோ. இளங்கோவன் : மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 200 ஏக்கருக்கு மேல் சாகுபடி செய்யும் ஏரிகளை அரசு பராமரிப்பில் ஏற்றுக்கொள்ள முடிவெடுக்கப்பட்டுள்ளதா ?

(இ) ஆம் எனில், தஞ்சை மாவட்டத்தில் அது போல் எடுத்துக்கொள்ளக்கூடிய ஏரிகள் எவை, எவை ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (அ) 200 ஏக்கருக்கு மேல் ஆயக்கட்டுள்ள ஏரிகள் ஏற்கெனவே அரசின் பராமரிப்பில் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளன.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.